தமிழக பட்ஜெட் பற்றி

# எதிர்க்கட்சி தலைவர்கள் கருத்து

சென்னை, ஜூலை. 18-

தமிழக பட்ஜெட் குறித்து எதிர்க்கட்சி தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

சட்டசபையில் நேற்று தமிழக பட்ஜெட்டை முதல்-அமைச்சர் கருணாநிதி தாக்கல் செய்தார். இந்த பட்ஜெட் குறித்து கருத்து தெரிவித்துள்ள தலைவர்கள் விவரம் வருமாறு:-

### எதிர்க்கட்சி தலைவர்

எதிர்க்கட்சி தலைவர் சோ.பாலகிருஷ்ணன்:-

பட்ஜெட்டில் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. எப்படி ஈடு கட்டப்போகிறார்கள் என்று தெரியவில்லை. ஆடம்பர செலவை குறைத்து 50 கோடி ரூபாய் அளவுக்கு மிச்சம் பண்ணினாலும் மீதி என்ன செய்யப்போகிறார்கள் என்று தெரியவில்லை.

85க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் நலிவுற்றுள்ளன. அதைப் பற்றி ஒன்றுமே இல்லை.

கடந்த ஆட்சியில் ஆசிரியர் பயிற்சி பள்ளிக்கூடங்களை நிறைய தொடங்கி அதன் விளைவாக 50 ஆயிரம் பேர் வேலை இன்றி இருக்கிறார்கள். அதுபற்றி எதுவும் இல்லை.

மக்களிடம் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முயற்சி செய்து இருக்கிறார்கள்.

### நல்ல பட்ஜெட்

பொதுவாக இது நல்ல பட்ஜெட். புதிய தொழில்கள் பற்றி கூறியிருப்பது, வெளிநாட்டு முதலீடுகளை பெற இருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றி அமைத்து இருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

### காகிதப்பூ மாலை

எஸ்திருநாவுக்கரசு (அஇ. அதி.மு.க.):-

இந்த பட்ஜெட் கண்ணைக் கவரும் காகிதப்பூ மாலை. வார்த்தைகளில் அலங்காரமும் வனப்பும் உள்ள அளவுக்கு மக்களின் குறைகளைப்போக்க தேவைகளை நிறைவு செய்ய பெரிய அளவு திட்டங்கள் எதுவும் இல்லை. யானைப் பசிக்கு சோளப்பொறி போல ஒரு சில திட்டங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன..

பற்றாக்குறை ஆயிரம் கோடி ரூபாயாக தொடருமானால், அறிவிப்புகள் வெறும் கானல் நீராக மட்டுமே இருக்குமே தவிர அவற்றை நடைமுறைப்படுத்த இயலாது.

குமரி அனந்தன் (தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்):-

விவசாய வளர்ச்சிக்கான நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மின் பற்றாக்குறையைப் போக்க, போதிய கவனம் செலுத்தப்படவில்லை. மக்களை வறியர்களாக்கும் மதுவை ஒழிப்பதாகச் சொன்ன தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற எந்தச் சிறிய முயற்சியும் இல்லாதது வருத்தத்திற்குரியது.

### ஆர்.எம்.வீரப்பன்

ஆர்.எம்.வீரப்பன் (எம்.ஜி. ஆர். மன்ற தலைவர்):- ஏழை-எளிய நடுத்தர மக்களுக்கு உதவும் வகையில் அன்றாடம் பயன்படும் உணவுப் பண்டங்கள் மற்றும் பல பொருட்களுக்கு வரியை நீக்கி இருப்பது போற்றுதலுக்கு உரியதாகும். மத்திய அரசு சமையல் எரிவாயு விலையை உயர்த்தி உள்ள நிலையில் அதன் மீது விற்பனை வரியை குறைத்திருப்பது ஆறுதல் அளிக்கிறது.

இவை எல்லாவற்றையும் விட புரட்சித்தலைவர் எம்.ஜி. ஆரின் சத்துணவு திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி, பசிக் கொடுமையை அறவே ஒழிக்கும் புரட்சி திட்டமான "பசிப்பிணி போக்கும் திட்டம்" மனித நேயமிக்க மாபெரும் திட்டம் ஆகும்.

வ.கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநில செயற்குழு கூட்டம் நேற்று மாலை சென்னையில் நடந்தது. இதில் ஆர்.நல்லக் கண்ணு,ப.மாணிக்கம், எஸ்.எஸ். தியாகராஜன், ஏ.எம். கோபு, எல்ஜிகீ தானந்தன், வே.துரை மாணிக்கம்,எம்.எல்.ஏ.க்கள் கோ. பழனிச்சாமி,கே.சுப்பராயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அந்த கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையை வகம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்மாநில குழு வரவேற்கிறது. தேர்தலின்போது மக்களுக்கு கொடுத்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் நிதி நிலை அறிக்கை அமைந்துள்ளது. இயற்கை பாதிப்புகளின்போது சேதம் அடையும் குடியிருப்பு,கால்நடை சேதங்களுக்கு ஈட்டுத்தொகை அறிவிப்பை வரவேற்கிறோம். இதுபோன்று இயற்கை சீற்றத்தால் சேதம் அடையும் நெல் பயிர், கரும்பு,வாழை, தென்னை போன்றவைகளுக்கும் ஈட்டுத்தொகை அறிவிக்கப் பட்டு இருந்தால் விவசாயிகளுக்கு ஆறுதலாக இருக்கும்.

மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### வரவேற்பு

ஜி.பழனிசாமி(வகம்.):-

இந்த பட்ஜெட்டை நான் வரவேற்கிறேன். நடந்து முடிந்த பாராளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களில் வாக்களித்த மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதாக பட்ஜெட் அமைந்துள்ளது.

டாக்டர் கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. (தேவந்திர குல வேளாளர் கூட்டமைப்பு):-

தமிழக அரசால் முன் வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கை பல்வேறு வரவேற்கத்தக்க பல நல்ல அம்சங்களை கொண்டிருக்கிறது. அதே சமயம் சில வருந்தத்தக்க விஷயங்களையும் கொண்டிருக்கிறது. மொத்தத்தில் சொல்லப்போனால் மக்களுக்கு இருக்கும் சுமைகள் குறைக்கப்படவில்லை. புதிய சுமைகள் ஏற்றப்படவில்லை.

மேற்கண்டவாறு அவர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

வாழப்பாடி ராமமூர்த்தி:- இந்த பட்ஜெட்டில் கவர்ச்சி இருக்கிறதே தவிர அடித்தள மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு உருப்படியான திட்டங்கள் எதுவும் இல்லை என்பது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. "காகிதப்பூ மணக்காது,

(1-ம் பத்தி பார்க்க)